**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 17.02.2026

அசல் வழக்கு எண். 194/2009

வா.சா. 1 – ஞானசேகரன், த/பெ. கிருஷ்ணமூர்த்தி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் தெரியும். கிரைய ஒப்பந்தம் எப்பொழுது எழுதப்பட்டது என்றால் 23.06.2006 அன்று எழுதப்பட்டது. கிரைய ஒப்பந்தத்தில் யார் கையொப்பம் போட்டது என்றால் மோகன் கேப்ரியல் இரண்டாவது பிரதிவாதி கையொப்பம் போட்டுள்ளார். உங்கள் மனைவி அதில் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பாக பின்பாக சொத்தினை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அதன் எல்லைகள் தன்மைகள் சரியாக இருந்தது என்றால் சரி இல்லை. அவ்வாறு சரியில்லை என்பதை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. படித்தால் தெரியுமா என்றால் சொல்லப்படவில்லை. வழக்கு சொத்தினை சரி செய்து கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் எங்கும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை எழுதப்பட்ட பொழுது எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்றால் ரூ.1,50,000/– ரொக்கமாக கொடுத்தேன். வழக்கு சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று நிர்ணயம் செய்தீர்கள் என்றால் ரூ.3,65,000/–என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.1,50,000/– போக மீதி பணத்திற்கு என்ன கொடுத்தீர்கள் என்றால் இரண்டு காசோலை கொடுத்தேன். அது யாருடைய காசோலை என்றால் இரண்டும் என்னுடைய காசோலை ஆகும். ஒரு காசோலையில் போதிய பணம் இருந்தது அது எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மற்றொரு காசோலை

போதிய பணம் இல்லை என்று திரும்பி வந்துவிட்டது என்றால் சரிதான் நான் ஒரு காசோலை மட்டுமே போட சொன்னேன் மற்றொரு காசோலை இடத்தை சரி செய்து கொடுத்து விட்டு போடசொன்னேன் அவ்வாறு போடாததால் திரும்பி வந்துவிட்டது. வழக்கு சொத்துக்காக வாதி உங்கள் மனைவி சீதா லட்சுமி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்தது நீங்கள் மட்டுமே என்றால் சரிதான். இந்த வழக்கில் நீங்கள் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மீதி பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றால் ரூ.64,000/– கொடுக்க வேண்டும். நீங்கள் கிரயம் முடிக்க தயாராக இல்லாததால் மீதி பணம் ரூ.64,000/– நீதிமன்றத்தில் செலுத்தவில்லை என்றால் சரியில்லை. கடந்த 25.04.2014 ஆம் தேதி நீதிமன்றத்தில் வாதி ஆஜர் ஆகாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனை கடந்த 08.01.2026 அன்று வழக்கு மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து கடந்த 17 ஆண்டுகளாக விற்பனை ஆவணம் எழுதிக் கொள்ள தயாராக இல்லை என்று சொன்னால் சரி இல்லை. இந்த வழக்கில் உள்ள இரண்டாவது பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான். உரிமை இல்லாத வரை வழக்கில் சேர்த்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அவர் கையொப்பம் போட்டுள்ளார் தேவையில்லாத நபரை சேர்த்ததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்ல. தேவையான நபர் ஆனா உங்களை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்கிறீர்கள் அதற்கான

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும்போது வில்லங்க சான்று பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்த காலகட்டத்தில் வில்லங்க சான்று பார்த்தீர்களா என்று பார்த்தேன் . கடைசியாக வில்லங்க சான்று எப்பொழுது பார்த்தீர்கள் என்றால் அக்ரிமெண்ட் போடும்போது பார்த்தேன். மேற்படி வழக்கு தள்ளுபடி ஆன காலகட்டத்தில் பிரதிவாதிகள் இருவரும் அவரது பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமை கிடையாது என்று சொன்னால் சரியில்லை. பிரதிவாதிகளின் பிள்ளை ஜேக்கப் மார்சல் என்பவர் தான் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்றால் சரியில்லை. வழக்குடன் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியில்லை. வழக்கு மூலம் உண்மையானது அல்ல என்றால் சரியில்லை. ஜேக்கப் மார்சல் என்பவருக்கு எழுதப்பட்ட பிறகு தான் இந்த ஆவணம் ரெஸ்டோர் செய்யப்பட்டது என்றால் நீங்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். வழக்கு காலநிலை சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. பரிகாரம் சட்டப்படி வழங்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,

Additional Subordinate Judge,
Kancheepuram.